

**Sakthi foundation**

## ஆதித்ய ஹ்ருதயம் - தமிழாக்கம்

தேவி பட்டிணத்தில் நவக்ரஹ ப்ரீதி பூஜை செய்து வைக்கும் அன்பர்களுக்கு இதைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

தேவி பட்டிணத்தில் ஸ்ரீராமனுக்கு நவக்ரஹ ப்ரீதி பூஜையை அகஸ்தியர் செய்து வைத்து, சூரிய பகவான் மீதான மிக உயர்ந்த ஆதித்ய ஹ்ருதயம் என்ற ஸ்துதியை [பக்தி நூல்] உபதேசித்தார்.மேலும் அவ்வூரின் கண் உள்ள பத்ர காளியை முன்னிட்டு நவராத்ரி ஒன்பது நாட்களையும் விரதமாக இருக்கப் பணித்தார்.

எடுத்த காரியத்தில் வெற்றியை அளிக்கக் கூடியது இந்த சூரியன் மீதான ஆதித்ய ஹ்ருதயம்.இலங்கையில் போர் செய்யும் போது, ஒரு முறை ஸ்ரீராமன் மிகவும் மனக் கலக்கம் - மனச் சோர்வு அடைந்தார்.அப்போது தேவி பட்டிணத்தில் அகஸ்தியர் தனக்கு உபதேசித்த இந்த ஸ்துதியை மூன்று முறை மனதார பக்தியுடன் பாராயணம் செய்து போரில் வெற்றியையும் பெற்றார்.அதன் அழகிய எளிய தமிழ் ஆக்கம் இங்கு தரப்படுகிறது.

**ஓம் சத்குருவே போற்றி!**
**ஓம் வினாயகா போற்றி!**

**உஷா தேவி சாயா தேவி உடனாய சூரிய தேவனே போற்றி!**

**அகஸ்தியர் கூறுகிறார்,**
”ஸ்ரீராமா! மிகப் பழமையானதும் மிக ரகசியமானதுமான சூரியன் மீதான ஆதித்ய ஹ்ருதயத்தைக் கேட்டு அதை மனமாரக் கூறுவாய்.எடுத்த காரியங்களில் வெற்றி

நிச்சயம் உண்டாகும்!

இது மிக மிகப் புனிதமானது. இது நமக்குள் இருக்கும் தேவை இல்லாத எண்ணங்கள் என்ற பகைவர்களைக் காட்டிக் கொடுத்து அழிக்க வல்லது.வெளியில் உள்ள எதிரிகளை அழிக்க வல்லது.

வாழ்வில் அனைத்து மங்கலத்தையும் தரும்.செய்த பாவங்களை நீக்கும்.மனக் கவலையைப் போக்கும்.

கதிர்களை உடையவனே! நாள் தோறும் உதிப்பவனே! தேவர்களும் அசுரர்களும் வணங்கும் புகழ் உடையவனே! உலகின் தலைவனே! அனைத்து தேவதைகளின் வடிவமாகவும் இருக்கும் சூரிய பகவானே! மிகச் சிறந்த ஆற்றல் படைத்தவனே!

நீயே பிரம்மா, விஷ்ணு, சிவன், இந்திரன், முருகன், பிரஜாபதி, யமன், சந்திரன், வருணன், பிதுர் தேவதைகள், அஷ்ட வசுக்கள், சாத்யர்கள், அஸ்வினி குமாரர்கள், மருத்துக்கள், மனு, வாயு, அக்னி, மக்களின் உயிர் சக்தி.

சூரிய தேவனே! நீரே பருவ காலங்களை மாற்றுகின்றீர்! அதிகமான வெளிச்சத்தை உயிர்களுக்கு வழங்குகின்றீர்!

அதிதி தேவியின் மகனே! உலகை நீயே படைக்கின்றாய்! நாள் தோறும் மக்களை இயக்குகின்றாய்! வானத்தில் உலா வருகின்றாய்! மழையைத் தருகின்றாய்! உருக்கிய தங்கம் போல் மின்னுகின்றாய்! உன் ஆண்மையால் அண்ட சராசரங்களை உருவாக்கி உள்ளாய்!

சூரியனே உன்னருளால் பகல் பொழுது தோன்றுகிறது! நீர் பச்சை வண்ணக் குதிரைகள் பூட்டிய அழகிய தேரில் பவனி வருகின்றாய்!

சூரியனே பல கோடி ஆயிரம் ஒளிக்கதிர்கள் உடையவன் நீயே! ஏழு குதிரைகள் பூட்டிய தேர் உனக்கு வாஹனம் அன்றோ?

சூரியனே உனது ஒளியால் மனதில் உள்ள அறியாமை என்ற இருளை அழிக்கிறாய்!

உருவங்களை அழிக்கிறாய்! உயிர்களுக்கு சாவையும் தருபவன் நீ! மீண்டும் பிறப்பையும் உண்டாக்குபவன் நீயே!

மனதில் உள்ள கவலையை நீக்குகின்றாய்! மனதின் தாபங்களைப் போக்குகின்றாய்! உன்னை அனைவரும் வணங்குகின்றனர்!அக்னியை உனக்குள் வைத்து இருக்கிறீர்! குளிர்ந்த பனியை நீக்குவதும் நீயே! மாலை வேளையில் அமைதியாக அஸ்தமனம் ஆகின்றீர்!

விண்வெளியின் மிக உயர்ந்த தலைவன் நீயே! ராகுவையும் அடக்கும் வீரம் கொண்டவர் நீயே! நான்கு வேதங்களிலும் சொல்லப்படும் உண்மைப் பொருள் நீயே! மழையை அருளி நீர்நிலைகளுக்கு உற்ற நண்பராய் இருக்கின்றீர்!

ஆடி மாதம் முதல் தை மாதம் வரை விந்திய மலையை மையமாகக் கொண்டு, தெற்குத் திசையில் வானில் அழகிய படகு போல் ஒளி வீசி மிதப்பதும் நீயே!

சூரிய தேவனே! நீர் வட்ட வடிவில் இருக்கின்றீர். வெயிலைத் தருகின்றீர். யமன் வடிவில் அழிப்பதும் நீயே!

சூரிய தேவா! மஞ்சள் கலந்த சிவப்பு வண்ணத்தில் ஜொலிக்கின்றீர்!

உச்சி வேளையில் வெம்மை உண்டாக்குகின்றீர். மூன்று காலத்தையும் உண்டாக்குகின்றீர். கண்ணைக் கூசும் பேரொளி உடையவர் நீர்.இந்த அண்டத்தையே வழி நடத்துகின்றீர்!

அனைத்து உயிர்களுக்கும் அன்பானவர் நீரே! உன் ஒளி இல்லை என்றால் யாரும் மண்ணுலகில் வாழவே முடியாது!

கிரஹங்கள், விண்மீன்கள் ஆகியவற்றின் தலைவன் நீரே! பன்னிரண்டு மூர்த்திகளும் நீரே! கிழக்கு மலைத்தொடர்களில் காலையில் உதயமாகி, மாலையில் மேற்குத்தொடர்ச்சி மலை முகடுகளில் மறைகின்றீர்! சூரிய தேவா உனக்கு அனேக கோடி நமஸ்காரம்!

வானத்தில் மிகப் பெரிய ஒளிப்பிழம்பாய் ஜொலிக்கும் தலைவனே உனக்கு அனேக கோடி நமஸ்காரம்!

பகல் பொழுதினை நிர்ணயம் செய்யும் தலைவா! உனக்கு நமஸ்காரம்!

எங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும் இறைவா நமஸ்காரம்!

ஆயிரம் கோடி ஒளிக்கதிர்களை உடைய சூரிய பகவானே! ஆயிரம் ஆயிரம் கோடி முறை நமஸ்காரம்!

பச்சை வண்ணக் குதிரைகள் பூட்டிய தேரில் உலா வரும் அதிதி அம்மையாரின் அருமை மகனே நமஸ்காரம்!

ஆணவம் கொண்ட மக்களை அடக்கி ஆள்பவனே! அனைவரையும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட வைப்பவனே! அரை நிமிஷத்தில் இரண்டாயிரம் யோஜனை தூரம் வெகு விரைவில் பயணிக்கும் சூரிய தேவா நமஸ்காரம்!

அழகிய தாமரைகளை மலரச் செய்யும் மார்த்தாண்டனே உனக்கு நமஸ்காரம்!

மும்மூர்த்திகளுக்கும் மேலான பரம்பொருளே நமஸ்காரம்!

யாராலும் அருகில் செல்ல முடியாதவரே நமஸ்காரம்!

முத்தொழிலையும் செய்யும் மூலப்பொருளே நமஸ்காரம்!

பனியை விலக்கி, இருட்டை நீக்கும் தேவனே நமஸ்காரம்!

பக்தர்களின் உட்பகையை அழிக்கும் சக்தியே நமஸ்காரம்!

எல்லை இல்லாத வடிவம் உடையவனே நமஸ்காரம்!

நன்றியை மறந்தவர்களைக் கொடுமையாக தண்டிப்பவனே நமஸ்காரம்!

ஒளி வடிவில் தெய்வீகத் தன்மை வாய்ந்தவரே நமஸ்காரம்!

உருக்கி விட்ட தங்கம் போல் ஜொலிப்பவனே நமஸ்காரம்!

யாகங்களில் இருந்து தேவதைகளுக்கும் யாகம் செய்பவர்களுக்கும் அருள்பவனே நமஸ்காரம்!

யாகத்தின் பலனை அருளும் தெய்வமே நமஸ்காரம்!

அனைத்து உலகங்களையும் உண்டாக்கிய தெய்வமே நமஸ்காரம்!

என் அறியாமையை நீக்குபவனே நமஸ்காரம்!

ஊழிக்காலத்தில் உலகை அழிப்பவனே, பின்னர் மீண்டும் உலகைப் படைப்பவனே நமஸ்காரம்!

உறங்கும் போது விழிப்புணர்வாய் இருக்கும் சர்வ சாட்சியான தெய்வமே நமஸ்காரம்!

அக்னி ஹோத்ர சடங்கின் முழுப்பலனையும் அதை ஒழுங்காகச் செய்பவனுக்கு அருள்பவனே நமஸ்காரம்!

ஸ்ரீராமா! சூரிய தேவனை மனமார இதைச் சொல்லி வணங்கு, இதைப் பாராயணம் செய், வெற்றி நிச்சயம்!" - என்று அகஸ்தியர் உபதேசித்தார்.

**ஜெய் ஸ்ரீராம்!**

**ஓம் நம சிவாய!**

**வால்மீகி ராமாயணம் - யுத்த காண்டம், 107 வது பகுதி**



SreeRam and Laxmana performing Navagraha pooja